ஓய்வு பெற்ற

# 42 பத்திரிகையாளர்களுக்கு மாதம் ரூ.12 ஆயிரம் ஓய்வூதியம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவினை வழங்கினார்!

**சென்னை, டிச. 11 –**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2025) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்கு தலா 12 ஆயிரம் ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஆணைகளை வழங்கினார்.**

**பத்திரிகையாளர்கள் முன்களப் பணியாளர்களாக அறிவிப்பு**

பத்திரிகையாளர்கள் அன்றாட உலகச் செய்திகளை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் உடனுக்குடன் வெளியிடுவதோடு, அரசிற்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கி அரசு செயல்படுத்தும் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்வதோடு, பேரிடர் காலங்களிலும் புயல், மழை, பெருவெள்ளத்தால் பொது மக்கள் பாதிக்கப்படும்போதும், பெரும் விபத்துகள், தொற்று நோய்ப் பரவல்கள் முதலிய சோதனைக் காலங்களிலும் இரவு பகல் எனப் பாராது ஓய்வின்றிப் பணி செய்து, உண்மைச் செய்திகளைத் திரட்டி மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

பத்திரிகையாளர்களின் இத்தகைய பணியினை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாட்டில் முதன்முறையாக உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

**பத்திரிகையாளர் நலவாரியம் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகள்**

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றப்பின், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் பத்திரிகையாளர் நலவாரியம் 1.12.2021 அன்று உருவாக்கப்பட்டு, உழைக்கும் பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கான நலத்திட்ட உதவிகள் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, கருச்சிதைவு உதவித் தொகை, கண் கண்ணாடி செலவுத் தொகை, இயற்கை மரணத்திற்கு உதவித் தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய உதவித் தொகைகள் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

பத்திரிகையாளர் நலவாரியத்தில் தற்போது வரை 3674 நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, 81 பத்திரிகையாளர்களுக்கு ரூ.8,56,500/ உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர்களின் நலன் காத்திட செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள்**

பத்திரிகையாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம், ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு நல நிதி, பத்திரிகையாளர் பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகை, குடும்ப ஓய்வூதியம், பத்திரிகையாளர் நல வாரியம் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

**திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றப் பின்னர் பத்திரிகையாளர் நலன் காத்திட உயர்த்தப்பட்ட உதவித் தொகைகள்**

இவ்வரசு பொறுப்பேற்றப்பின், 18.7.2022 ஆம் நாளிட்ட அரசாணையின்படி, பணியிலிருந்து ஓய்வுபெற்றவுடன் வழங்கப்படும் பணிக்கொடை உச்சவரம்பு ரூ.3 இலட்சம் என்பதை ரூ.4 இலட்சமாக உயர்த்தி வழங்கி வருகிறது.

பத்திரிகையாளர் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10,000/லிருந்து ரூ.12,000/ஆக 14.06.2023 முதல் உயர்த்தப்பட்டு, 356 பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.5,000/ லிருந்து ரூ.6,000/ ஆக ஜூன் 2023 முதல் உயர்த்தப்பட்டு 72 பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை 125 பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமும், 27 பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்றப்பின்னர் 59 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு 2 கோடியே 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், புகைப்படக்காரர், செய்தியாளர், பிழை திருத்துநர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரிட்டால் அவர்கள் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி ரூ.1.25 இலட்சம் என்பதை ரூ.2.50 இலட்சமாகவும், ரூ.2.50 இலட்சம் என்பதை ரூ.5 இலட்சமாகவும், ரூ.3.75 இலட்சம் என்பதை ரூ.7.50 இலட்சமாகவும், ரூ.5 இலட்சம் என்பதை ரூ.10 இலட்சமாகவும் இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து மருத்துவ உதவித்தொகை**

பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்டு வரும் மருத்துவ உதவித் தொகை ரூ.2,00,000/ லிருந்து ரூ.2,50,000/ஆக 19.7.2022 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை 16 பத்திரிகையாளர்களுக்கு 30 இலட்சத்து 61 ஆயிரத்து 339 ரூபாய் மருத்துவ உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**42 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியத்திற்கான ஆணைகள் வழங்குதல்**

பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்குத் திராவிட மாடல் அரசு, பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதந்திர ஓய்வூதியமாக தலா ரூ.12 ஆயிரம் வழங்கிட 27.11.2025 அன்று அரசாணை வெளியிடப் பட்டது.

அதன்படி, பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்கும் தலா 12 ஆயிரம் ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், கூடுதல் இயக்குநர்கள் ச.செல்வராஜ், முனைவர் ஆர். பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் 48 பேர்கள் இரத்த தானம் வழங்கும் முகாம் மாநகர அலுவலகத்தில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பங்கேற்று முகாமை துவக்கி வைத்தார். உடன் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# ரூ.332.46 கோடியில் 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, டிச. 11 –**

**ரூ.13.97 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 3 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்களை திறந்து வைத்து, ரூ.332.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2025) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நாமக்கல் மாவட்டம் - சேந்தமங்கலம், நீலகிரி மாவட்டம் - பந்தலூர், திருவண்ணாமலை மாவட்டம் - கீழ்பெண்ணாத்தூர் ஆகிய வட்டங்களில் 7000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 13.97 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்களை திறந்து வைத்தார். மேலும், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 332 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களைச் சேமித்து வைத்திடும் நோக்குடன் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை நவீன முறையில் சேமித்து வைத்திடவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட கிடங்குகளின் விவரங்கள்**

தமிழ்நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பினை வட்ட அளவில் உறுதி செய்யவும், பொதுவிநியோகத் திட்டத்தின் பயன்பாட்டிற்கான தானியங்களின் சேமிப்பிற்கான கொள்ளளவினை அதிகப்படுத்தும் விதமாகவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டத்தில் 4.97 கோடி ரூபாய் செலவில் 2000 மெ.டன் கொள்ளளவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்குகள், நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில் 4.50 கோடி ரூபாய் செலவில் 2500 மெ.டன் கொள்ளளவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்குகள், திருவண்ணா மலை மாவட்டம், கீழ்பெண்ணாத் தூர் வட்டத்தில் 4.50 கோடி ரூபாய் செலவில் 2500 மெ.டன் கொள்ளளவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்குகள், என மொத்தம் 13.97 கோடி ரூபாய் செலவில் 7000 மெ.டன் கொள்ளளவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள 3 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**அடிக்கல் நாட்டப்பட்டுள்ள கிடங்குகளின் விவரங்கள்**

விவசாயிகளின் கடின உழைப்பில் உற்பத்தியாகி கொள்முதல் செய்யப்படும் “ஒரு நெல்மணிக்கூட வீணாகக்கூடாது” என்ற முதலமைச்சர் அவர்களின் உயரிய சிந்தனையை செயல் வடிவமாக்கும் விதமாக மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

அதன்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நடுவூர் கிராமத்தில் 170.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,00,000 மெ.டன் கொள்ளளவிலும், நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், திருக்கண்ணபுரம் கிராமத்தில் 29.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20,500 மெ.டன் கொள்ளளவிலும், திருக்குவளை வட்டம், மணக்குடி கிராமத்தில் 22.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 17,000 மெ.டன் கொள்ளளவிலும்,

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், பரசலூர் கிராமத்தில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,000 மெ.டன் கொள்ளளவி லும், தரங்கம்பாடி வட்டம், வில்லியநல்லூர் கிராமத்தில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 21,000 மெ.டன் கொள்ளளவிலும்;

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், டி.புடையூர் கிராமத்தில் 12.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,500 மெ.டன் கொள்ளளவிலும் மற்றும் திட்டக்குடி வட்டம், தாழநல்லூர் கிராமத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11,000 மெ.டன் கொள்ளளவிலும்;

திருவண்ணாமலை மாவட்டம், மேல்பெண்ணாத்தூர் வட்டம், செங்கம் கிராமத்தில் 17.91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12,000 மெ.டன் கொள்ளளவிலும், திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கோவிலம்மாபட்டி கிராமத்தில் 12.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,000 மெ.டன் கொள்ளளவிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஜுஜுப்பள்ளி கிராமத்தில் 12.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,000 மெ.டன் கொள்ளளவிலும்;

என மொத்தம் 2,18,000 மெ.டன் கொள்ளளவில், 332 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் கட்டும் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் அ.அண்ணாதுரை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணைச் செயலாளர் பானோத் ம்ருகேந்தர் லால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி. நீலமேகம், துரை சந்திரசேகரன், கே. அண்ணாதுரை, என்.அசோக்குமார், ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ். எஸ்.பழனிமாணிக்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர் திருமதி அஞ்சுகம் பூபதி, விவசாய சங்க நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி, பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. என் வாக்குச்சாவடி... வெற்றி வாக்குச்சாவடி பாக முகவர்கள் கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கினார். இதில் பகுதி கழகச் செயலாளர், மண்டல குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி, ரபி அகமது, மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.வி. சத்திய பிரபு, வே.க.தன்ராஜ். ஆர்.பத்மநாபன், ப.ஸ்ரீதர் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நெல் கொள்முதலுக்கான ஈரப்பத விதிமுறைகளை

# 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக எப்போது தளர்த்தப் போகிறீர்கள்?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, டிச.11–

தமிழ்நாடு குறுவை பருவத்தில் அதிக நெல் உற்பத்தி மற்றும் கொள்முதலில் சாதனை படைத்துள்ளதையடுத்து, விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக உயர்த்தி விரைந்து ஆணை வழங்கிடவும், செறிவூட்டப்பட்ட அரிசி மணிகளின் மாதிரி எடுக்கும் அதிகாரத்தை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள இந்திய உணவுக் கழக அதிகாரிகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு கடந்த மாதம் 11ஆம் தேதி கடிதம் எழுதியதை தொடர்ந்து நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொட ரில் கழக நாடாளு மன்ற குழுத் துணைத்தலை வர் தயாநிதி மாறன் எம்.பி., நுகர்வோர் நலம், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சருக்கு பல கேள்விகளை எழுப்பினார். அதில், குறுவை பருவத்திற்கான (Kharif 20252026) தமிழ்நாட்டின் நெல் கொள்முதல் இலக்கை 16 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து மாற்றி இதே குறுவை பருவத்தின் கடைசியில் கொள்முதல் செய்யப்படும் மொத்த நெல் அளவிற்கேற்ப அதன் இலக்கை ஒன்றிய அரசு மறு ஆய்வு செய்து திருத்தம் மேற்கொள்ளத் தயாரா? என கேள்வி எழுப்பினார். மேலும் கொள்முதல் இழப்புகளிலிருந்து தமிழ்நாட்டு நெல் விவசாயிகளைப் பாதுகாக்க ஒன்றிய அரசு உடனடியாக எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? என்பன போன்ற பல கேள்விகளை எழுப்பினார்.



அதன் விவரங்கள் பின்வருமாறு :

குறுவை பருவத்திற்கான (Kharif 20252026) தமிழ்நாட்டின் நெல் கொள்முதல் இலக்கை 16 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து மாற்றி இதே குறுவை பருவத்தின் கடைசியில் கொள்முதல் செய்யப் படும் மொத்த நெல் அளவிற்கேற்ப அதன் இலக்கை ஒன்றிய அரசு மறு ஆய்வு செய்து திருத்தம் மேற்கொள்ளத் தயாரா? மேலும் அதற்கான அங்கீகாரத்தின் தற்போதைய நிலை என்ன? ஏதேனும் தாமதம் இருந்தால் அதற்கான காரணங்கள் என்ன?

வடகிழக்குப் பருவமழையின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பத விதிமுறைகளை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாகத் தளர்த்தக் கோரி தமிழ்நாடு அரசு விடுத்த கோரிக்கையை ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்யுமா? மேலும், இந்தக் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்காக அனுப்பப்பட்ட ஒன்றிய அரசின் ஈரப்பதம்மதிப்பீட்டுக் குழுக்களின் (moisture assessment teamsMAT) பரிந்துரைகளின் தற்போதைய நிலை என்ன, அந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்/எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் என்ன?

விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில், கடந்த காலங்களில் வழங்கப்பட்டது போல, நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் அளவைத் தளர்த்த வேண்டுமென்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஒன்றிய அரசு மறு பரிசீலனை செய்யுமா?

அவ்வாறு செய்தால், அதன் விவரங்களும், அதற்கு ஒன்றிய அரசின் பதிலும் என்ன?

ஊட்டச்சத்துக் கலக்கப்பட்ட அரிசி (Fortified Rice Kernel FRK) வழங்குவதில், தமிழ்நாடு அரசு கோரியுள்ளபடி, மூட்டை அளவை 25 கிலோவிலிருந்து 50 கிலோவாக அதிகரிக்கவும், மாதிரிப் பிரிவின் (Sample Lot Size) அளவை 10 மெட்ரிக் டன்னிலிருந்து (MT) 25 மெட்ரிக் டன்னாக திருத்தி அமைக்கவும் ஒன்றிய அரசு ஒப்புதல் அளிக்குமா? அவ்வாறு ஒப்புதல் அளித்தால் அதன் விவரங்கள் என்ன, தற்போதைய நிலுவை நிலை (Status of Pending Approval) என்ன?

கொள்முதல் இழப்புகளிலிருந்து தமிழ்நாட்டு நெல் விவசாயிகளைப் பாதுகாக்க ஒன்றிய அரசு உடனடியாக எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?